**தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றுமற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர்31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து,நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியத்தின் நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புகள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்குஇணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது,நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் நிதியம் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிறுவனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு நிறுவனத்திற்குஉள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது

நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிறுவனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய கண் வங்கியின் வருமானம், செலவுகள், நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்கள் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும், தேசிய கண் வங்கியின் நிலையான | 2022 ஆம் வருடத்தில் தயாரிக்கப்படுகின்ற நிதியத்தின் கணக்குகளில் இத் தவறு திருத்தப்படும். | தேசிய கண் வங்கிக்குச் சொந்தமான சொத்துக்களை நிதியத்தின் நிதிக் கூற்றுக்களில் வெளிப்படுத்துவதற்கான தரவுகள் மற்றும் தகவல்கள்கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட |

| | | | |
|---|---|---|---|
| | சொத்துக்கள் அந் நிதிக்கூற்றுக்களில் வெளிக்காட்டப்படாததுடன் அது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | வேண்டும். |
| (ஆ) | தேசிய கண் வங்கியினால் வெளிநாடுகளுக்கு வழங்கப்பட்ட கண் படங்களுக்காக கடந்த சில விடயங்களில் மற்றும் மீளாய்வாண்டில் அறவிடப்பட்டிருந்த முறையே ரூபா 1,980,951 மற்றும் ரூபா 4,684,458 ஆன முற்பணங்கள் 2021 திசெம்பர் 31 வரை தீர்க்கப்பட்டிருக்காமையால் அம் முற்பணம் நடைமுறைப் பொறுப்புக்களாக இணங்காணப்பட வேண்டிய போதிலும், அதற்குப் பதிலாக அந்தந்த வருடங்களில் வருமானமாக இணங்காணப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் மிகை ரூபா 4,684,458 ஆல் மற்றும் அத்தினத்தில் திரண்ட மிகை ரூபா 1,980,951 ஆல் அதிகமாகவும், அத்தினத்தில் நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 6,665,409 ஆல் குறைவாகவும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தன. | - மேற்படி - | சரியான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | கடந்த வருடங்களில் தேசிய கண் வங்கியினால் வெளிநாடுகளுக்கு வழங்கப்பட்ட கண் படங்களுக்காக 2021 திசெம்பர் 31 இல் பெற வேண்டிய ரூபா 897,082 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. இக் காரணத்தினால் அத்தினத்தில் திரண்ட மிகை மற்றும் நடைமுறைச் சொத்துக்கள் அதற்குச் சமமான பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது. | - மேற்படி - | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | மீளாய்வாண்டில் தேசிய வங்கியினால் பெறப்பட்டிருந்த கண் படங்கள் சேமிப்பக ஊடகத்திற்காக (Cornea Storage media) கண் வைத்தியசாலைக்கு செலுத்த வேண்டிய ரூபா 2,928,551 கணக்கிடப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் 2021 திசெம்பர் 31 இல் நடைமுறைப் பொறுப்புக்கள் - அதற்குச் சமமான பெறுமதியால் முறையே அதிகமாகவும் மற்றும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | - மேற்படி - | - மேற்படி - |
| (உ) | 2021 திசெம்பர் 31 இல் அட்டுறு செலவுகள் ரூபா 663,000 கணக்கிடப்பட்டிருக்காமையால் மீளாய்வாண்டின் மிகை மற்றும் 2021 திசெம்பர் 31 இல் நடைமுறைப் பொறுப்புக்கள் அதற்குச் சமமான பெறுமதியால் முறையே அதிகமாகவும் மற்றும் குறைத்தும் காட்டப்பட்டிருந்தன. | 2022 ஆம் வருடத்தில் தயாரிக்கப்படுகின்ற நிதியத்தின் கணக்குகளில் இத் தவறு திருத்தப்படும். | சரியான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.- |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு | தனிப்பட்ட அடிப்படையில் நோயாளர்களுக்கு உதவிகளை வழங்குவதற்கு நிதியச் சட்டத்தின் ஒதுக்கங்கள் ஒதுக்கபட்டிராத போதிலும், மீளாய்வாண்டில் ஒரு நோயாளிக்கு ரூபா 2,700,000 ஆன நிதி உதவியொன்று வழங்கப்பட்டிருந்தது. மேலும் சட்டத்தின் செயற்பாடுகளின் விடயப்பரப்பிற்கு உட்படாத செயற்பாடுகளுக்காக சங்கமொன்றுக்கு ரூபா 1,000,000 மானியமொன்று வழங்கப்பட்டிருந்தது. | 1981 இன் 13 ஆம் இலக்க தேசிய சுகாதார அபிவிருத்தி நிதியச் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சருக்கு கையளிக்கபட்டுள்ள அதிகாரத்தின் பிரகாரம் ரூபா 2,700,000 ஆன தொகை மனிதாபிமான அடிப்படையில் மற்றும் முன்னுதாரணமின்றி இக் கொடுப்பனவு அங்கீகரிக்கப்பட்டுள்ளதாகவும் அப் பிரிவின் பிரகாரம் இலங்கை சுகாதார பாதுகாப்பு சேவைகளில் ஈடுபடுபவர்களின் கல்வி அல்லது அறிவை மேம்பபடுத்துவதற்காக | நிதியச் சட்டத்தின் காட்டப்பட்டுள்ள பணிகளின் விடயப்பரப்பிற்கு உட்பட்ட செயற்பாடுகளுக்கு மட்டுமே நிதி உதவிகள் வழங்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நிதியத்தின் பணம் பயன்படுத்தப்பட முடியுமென்றும் அதன் பிரகாரம் இலங்கை வைத்திய சங்கத்திற்கு ரூபா 1,000,000 ஆன மானியம் 2021 செப்டெம்பர் 21 ஆந் திகதிய பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் செலுத்தப்பட்டதாகவும், இக் கொடுப்பனவு சட்டதின் சட்ட விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குவதாக மேற்கொள்ளப்பட்டிருந்த தாகவும், | |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 571(2) | காலாவதியாகிய வைப்புக்கள் தொடர்பாக இதுவரை அவை வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டதன் பின்னர் மீண்டும் பெறப்படுவதற்காக மேற்கொள்ளப்படும் கோரிக்கைகளை முடிந்தளவு தவிர்க்கும் நோக்கில் அவ் வைப்புக்கள் வருமானத்திற்கு செலவு வைப்பதற்கு முன்னர் விசாரிக்கப்பட வேண்டிய போதிலும், நிதியத்தினால் அவ்வாறு விசாரிக்கப்படாது ரூபா 1,429,775 ஆனது அரச வருமாதன்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. | நிதிப்பிரமாணம் 570 இன் பிரகாரம் செயற்திட்டம் முடிக்கப்பட்ட திகதியிலிருந்து 02 வருடங்கள் கடந்த பின்னர் காலாவதியாகிய வைப்புக்களாக இனங் காணப்பட்டிருந்தமை மற்றும் பணிப்பாளர் சபை அங்கீகாரம் 2021 திசெம்பர் 30 இல் பெறப்பட்டு இந் நிதியம் சந்தர்ப்பத்திற்கேற்ற வாறு வருமானத்திற்கு செலவு வைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தது. | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவுகள் ரூபா 188,434,938 ஆன மிகை ஒன்றாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 80,133,424 ஆக இருந்தது. அதன் படி நிதி விளைவுகளில் ரூபா 108,301,514 இற்கான முன்னேற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டது. இந்த முன்னேற்றத்திற்கு மீளாய்வாண்டிற்கான வெகுமதிகள் மற்றும் ஏனைய வருமானங்கள் ரூபா 126,447,755ஆல் அதிகரித்தமை முக்கியமான காரணமாக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ திறமையின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கையின் தேசிய கண் வங்கியை நிறுவுவதற்காக சிங்கப்பூரின் Asia Cornea Foundation நிறுவனத்துடன் 2010 ஆண்டின் போது மேற்கொண்டிருந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி மற்றும் இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு ஒன்றாக நிறுவுவதற்காக 2013 ஆகஸ்ட் 29 திகதி கிடைத்திருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கி சட்டம் ஒன்றின் மூலம் வேறாக நிறுவனம்சார் கட்டமைப்பொன்றுடன் அலகு ஒன்றாக நிறுவுவதற்கு மற்றும் அதன் கொடுக்கல் வாங்கல்களை அறிக்கையிடுவதற்கு தனியானதொரு நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு 2022ஏப்ரல் 08 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | இலங்கை தேசிய கண் வங்கிச் சட்டம் தற்போது அமைச்சரவைக்கு சமர்ப்பிப்பதற்கு தயார் நிலையில் உள்ளதுடன், அமைச்சின் சட்டப் பிரிவு இது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றதாகவும் மற்றும் சட்டம் அங்கீகரிக்கப்பட்டு தேசிய கண் வங்கி சட்டரீதியான நிறுவனமொன்றாக தாபிக்கப்பட்டதன் பின்னர் தனியான நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் | இலங்கை தேசிய கண் வங்கி வேறான நிறுவன கட்டமைப்பு உடைய சட்டரீதியான அலகு ஒன்றாக நிறுவுதல் விரைவாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை தேசிய கண் வங்கி நம்பிக்கை பொறுப்பு என நிறுவும் வரை அதன் அலுவல்களை செயற்திட்டம் ஒன்றாக தொடர்ச்சியாக நடாத்திச் செல்வதற்கும் 2007 ஏப்ரல் 05 திகதிய 33 இலக்கங் கொண்ட முகாமைத்துவ சேவை சுற்றறிக்கையின் படி ஆளணியினை சேர்ப்பதற்காக மற்றும் சம்பளம் செலுத்துவதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருந்தது. அவ்வாறாயினும் 33 இலக்க முகாமைத்துவ சுற்றறிக்கையின் பந்தி 1.1 இன் பிரகாரம் இலங்கை தேசிய கண் வங்கி செயற்திட்டம் ஒன்றாக கணிப்பதற்காக தேவையான நிபந்தனைகளை பூர்த்தி செய்திருக்காத காரணத்தினால் அமைச்சரவை தீர்மானத்தின் படி செயற்படுவதற்கு முடியாமல் இருந்தது. | அமைச்சரவைச் செயலாளரின் அமப/13/1172/509/052 ஆம் இலக்க 2013 செப்தம்பர் 06 ஆந் திகதிய அமைச்சரவைத் தீர்மானம் பிரகாரம் இலங்கை கண் வங்கியை பாராளுமன்ற அதிகாரச்சட்டத்தின் பிராகரம் நிறுவுவதற்கு நியதிச்சட்டம் விதிக்கப்படும் வரையிலும் தேசிய கண் வங்கியின் பணிகள் செயற்திட்டமொன்றாக தொடர்ச்சியாக பேணிச் செல்வதற்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது என்பது. | 2007 ஏப்ரல் 05 திகதிய 33 இலக்க முகாமைத்துவ சேவை திணைக்களத்தின் சுற்றறிக்கையின் படி, தேசிய கண் வங்கி செயற்திட்டம் ஒன்றாக கணிக்க முடியாமையால் மற்றும் அதன் படி ஆளணியினரை சேர்ப்பதற்கு முடியாமையால் இது தொடர்பாக அமைச்சரவையை அறிவுறுத்த வேண்டியிருந்ததுடன், எடுக்கக் கூடிய மாற்று நடவடிக்கை தொடர்பாக கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்கள் தொடக்கம் 09 வருடங்கள் வரையான காலமாக பெற வேண்டிய ரூபா 1,382,346 ஆன கடன்பட்டோர் மீதியொன்று இவ்வறிக்கைத் திகதி வரையில் அறவிடப்பட்டிருக்கவில்லை. | பணத்தை செலுத்துமாறு குறிப்பிடப்பட்டு உரிய தரப்பினருக்கு கடிதம் அனுப்பட்டுள்ளது. | நீண்ட காலமாக அறவிடப்பட முடியாதிருக்கும் இத் தொகையை அறவிடுவதற்கு அல்லது அறவிடப்படுவதற்கு பொறுப்பான தரப்பினர் இருந்தால் அவர்களிடமிருந்து அறவிடுவதற்கு அல்லது முறையாக புத்தகங்களில் பதிவளிப்பதற்கு உரிய நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம், செயற்பாட்டுப் பணிகள் முடிவுற்ற 07 செயற்திட்டங்களுக்காக ரூபா 1,392,063 நன்கொடை அளித்த நிறுவனங்களுக்கு மீண்டும் அனுப்புவதற்கு அல்லது பொது நிதியத்திற்கு கையளிப்பதற்கோ ஆன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டு நன்கொடைத் தொகை பொது நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு மேற்கொண்ட நடவடிக்கை எடுக்கப்படும். | செயற்திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அல்லது இணக்கப்பாட்டின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியதுடன் இல்லையெனில் மீதித் தொகை நிதியத்தின் பொது நிதியத்திற்கு கையளிக்கப்பட வேண்டும். |
| (இ) | 10 புதிய ஆயுர் வேத உற்பத்திகளை திறந்த சந்தையில் அறிமுகப்படுத்தல் மற்றும் பிரபல்யப்படுத்தும் செயற்திட்டத்திற்காக ரூபா 15 மில்லியன் மானியமொன்று 2015 மே 26 ஆந் திகதி ஆயுர்வேத மருந்துகள் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அத்தொகை புதிய உற்பத்தி அலகொன்றின் இலாபத்தில் 10 சதவீதத்தை மாதாந்தம் நிதியத்திற்கு செலவு வைப்பதற்கு கூட்டுத்தாபனம் கொள்கையளவில் ஒப்புக்கொண்டிருந்தது. ஆனால் 2015 யூன் மாதத்திலிருந்து 2019 திசெம்பர் 31 வரையான காலப்பகுதியில் நிதியத்திற்கு ரூபா 1,260,427 ஆன தொகையொன்று மட்டுமே பெறப்பட்டிருந்ததுடன் 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களில் எவ்வித | 2015 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் ஆயுர் வேத கூட்டுத்தாபனத்தினால் விற்பனை வருமானத்தில் ரூபா 1,260,427 ஆன தொகையொன்று நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களிற்கான பணத்தைச் செலுத்துமாறு நினைவூட்டல்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் | ஆயுர்வேத மருந்து கூட்டுத்தாபனத்துடன் ஏற்படுத்தப்பட்ட இணக்கத்தின் பிரகாரம் நிதியத்திற்கு பெற வேண்டிய தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | தொகையொன்றும் அறவிடப்படுவதற்கு முடியாதிருந்தது. | | |
| (ஈ) | அரச மருத்துவமனையொன்றுக்காக அத்தியாவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மற்றும் மருத்துவமனையின் பழுதுபார்த்தல் பணிகளுக்கு தேவையான நிதியினைத் திரட்டும் நோக்கில் சுகாதார அபிவிருத்தி லொத்தர் சீட்டு முறைமை 1998 ஆம் ஆண்டு செப்தம்பர் மாதம் அறிமுகப்படுத்தப்பட்டிருந் ததுடன், ஒவ்வொரு சீட்டிழுப்புத் தடவைக்கும் முதன்மையாக அந்த தடவையின் போது நிதியத்தினால் மேற்கொள்ளப்படும் பணிகள் இனங்காணப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு அந்த பணிகள் நிறைவேற்றப்பட வேண்டும் எனினும், அதன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை.அத்துடன் 2020 மற்றும் 2021 ஆம் வருடங்களுக்காக பொதுத்திறைசேரியிடமிருந்து நிதி விடுவிப்பதற்காக நிதியத்தினை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ள பணிகள் உள்ளடக்கிய வேலைத்திட்டமொன்று சமர்ப்பிக்குமாறு 2020 மார்ச் 06 ஆம் திகதி திறைசேரி செயற்பாடுகள் மேலதிகப் பணிப்பாளர் நாயகத்தினால் கோரிக்கையொன்று விடுவிக்கப்பட்டிருந்த போதிலும் இவ்வறிக்கைத் திகதி வரையில் அவ்வாறான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்பட்டு சமர்ப்பிக்கப்படவில்லை. சீட்டிழுப்பு வருமானத்தில் செய்யப்பட வேண்டிய பணிகள் தொடர்பாக எவ்வித வேலைத்திட்டமொன்றும் நிதியத்திடம் காணப்படாததால் 2021 திசெம்பர் 31 வரை பொதுத் திறைசேரியிலிருந்து பெற வேண்டிய ரூபா 113,551,952 ஐ விடுவிப்பதற்கு முடியாதிருந்தது. | எதிர்வரும் வருடங்களில் இது தொடர்பில் நடவடிக்கை எடுப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ள தாகவும் மற்றும் 2022 ஆம் வருடத்திற்கானசெயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் | சுகாதார அபிவிருத்தி லொத்தர் முறையின் மூலம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முறையான வேலைத்திட்டமொன்றை தயாரித்து அதன்பிரகாரம் அந்நிதியம் செயற்திறனாகப் பயன்படுத்தப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | 2014 ஆம் ஆண்டு முதல் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலுமான காலப்பகுதியினுள் கிடைத்திருந்த ரூபா 428,491,540 ஆன லொத்தர் வருமானத்தில் மருத்துவமனைகளுக்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு மற்றும் மருத்துவமனையின் பழுதுபார்த்தல் பணிகள் போன்ற நோக்கத்துடனான பணிகளுக்கு முறையே ரூபா | - மேற்படி - | சுகாதார அபிவிருத்தி லொத்தர் முறையின் மூலம் கிடைக்கும் வருமானம் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட வேண்டும |

20,578,392 மற்றும் ரூபா 156,749,175 உம் ஆக மொத்தம் ரூபா 177,327,567 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. லொத்தர் வருமானத்தின்பயன்பாடு41 சதவீதமாக உயர்மட்டத்தில் காணப்பட்டது.

**3.3 நிதியத்தின் குறைப்பயன்பாடு**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதியத்திற்கு 1997 ஆம் ஆண்டு முதல் 2013 ஆம் ஆண்டு வரை 10 குறிப்பிட்ட கருமங்களுக்காக கிடைத்திருந்த ரூபா 5,770,668 ஆன நன்கொடை 3 வருடங்கள் முதல் 18 வருடங்கள் வரையான காலவீச்சில் அக் குறிக்கோள்சார் கருமங்களை நிறைவேற்றுவதற்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இந்த நன்கொடைகளை பயன்படுத்தி குறிக்கோள்சார் கருமங்களை நிறைவேற்றிக் கொள்ளும் படி குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு அறிவுறுத்தியுள்ளதாகவும் மற்றும் உரிய நிறுவனங்கள் கோரிக்கை விடுக்கும் வரை இந் நிதியை வேறு பணிகளுக்காகப் பயன்படுத்முவதற்கு முடியாதிருந்ததாகவும் | நிதியத்திற்கு நன்கொடையாக கிடைத்திருந்த நிதியினை அந்த இலக்கிடப்பட்ட கருமத்தை நிறைவேற்றுவதற்காக ஈடுபடுத்த வேண்டும். |
| (ஆ) | நிதியத்தின் எதிர்பார்த்த நோக்கங்களை நிறைவேற்றக்கூடிய வகையில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம் மற்றும் இலங்கை சுகாதார சேவையை மேம்படுத்துவதற்காக நிதியத்திற்கு சொந்தமான பொது நிதியம் பயன்படுத்தப்படும் முறை தொடர்பாக நிகழ்ச்சித் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2021திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான பொது நிதியத்தின் மொத்த வருமானம் ரூபா 599,747,320 ஆக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டினுள் பொது நிதியத்தில் செலவிடப்பட்ட தொகை ரூபா 33,458,630 மட்டுமே ஆகும். இதன் பிரகாரம்பொது நிதியத்தின் பயன்பாடு 6 சதவீதமான மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | எதிர்வரும் வருடங்களில் இது தொடர்பான நடவடிக்கைகளை எடுப்பதற்குக் கவனம் கோரப்பட்டுள்ளதுடன் மற்றும் 2022 ஆம் வருடத்திற்கான வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும். | நிதியத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை அடைந்து கொள்ளக்கூடிய வகையில் திட்டம் மற்றும் வேலைத்திட்டம் தயாரிக்கப்பட்டு செயற்படுத்தப்படல் வேண்டும். |